**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 – ம் நாள் புதன்கிழமை
******

**இடைமனு எண்.4/2023–ல் அசல் வழக்கு எண்.167/2016**

1. பாபு
2. கற்பகம்
3. ராதிகா .....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

...எதிராக...

புஷ்பவள்ளி ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 22.11.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுவாமிநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

வழக்கு சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை ஆணையராகவும் அவருக்கு உதவியாக சீர்காழி நகராட்சி சார் ஆய்வாளர் (நில அளவை) ஆகியோர்களை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 26, விதி 9–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

(i) மனுதாரர் அசல் வழகில் 1–ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது வாதியின் பாட்டனாரும் வாதியின் தந்தை ராமலிங்கத்தின் தந்தையான நடேசபடையாட்சிக்கு சொந்தமானது. நடேசபடையாட்சி என்பவர் இறந்துவிட்டார். இறந்த நடேசபடையாட்சிக்கு 1. கிருஷ்ணமூர்த்தி (1–ம் பிரதிவாதியின் தந்தை) 2. ராமலிங்கம் (வாதியின் தந்தை), 3. கிருஷ்ணன்(2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தை) 4. பொன்னம்பாள் (நடேசபடையாட்சியின் மனைவி) ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். வழக்கு சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதியின் தந்தை இந்நீதிமன்றத்தில் நடேசபடையாட்சியின் வாரிசுகளான ராமலிங்கம், கிருஷ்ணன், பொன்னம்மாள் ஆகியோர்கள் மீது அசல் வழக்கு எண்.211/1982 என்ற வழக்கை தொடர்ந்து மேற்படி வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டு அதை அனுசரித்து பாகம் பிரிக்க வேண்டி இடைமனு எண்.161/84–ல் மனு செய்யப்பட்டு ஆணையர் நியமிக்கப்பட்டு வழக்கு சொத்து பிரிக்கப்பட்டு 19.02.1993–ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) இந்த விவரங்களை பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார்கள். மேற்படி சங்கதிகளை மறைத்து வாதி சர்வே நம்பரில் மாற்றம் செய்து, ஒரு சில நான்கெல்லையில் மாற்றம் செய்து பொய்யான வழக்கை பிரதிவாதிகளின் மீது தாக்கல் செய்துள்ளார். மேற்படி தவறுகள் 1–ம் மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் கூடுதல் எதிர்வழக்குரையில் சுட்டி காட்டப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதி தனக்கு கிடைத்த பாகத்தை ரஹமத்துன்னிசாபேகம் என்பவரிடம் விற்றுவிட்டார். வழக்கு சொத்தின் தன்மைகளையும் அசல் வழக்கு எண்.167/2016–ல் காட்டப்பட்டுள்ள சொத்தும், அசல் வழக்கு எண்.211/1982.ல் காட்டப்பட்டுள்ள சொத்தும் ஒரே சொத்துக்கள் என்பதால் வழக்கறிஞர் ஆணையர் மற்றும் அவருக்கு உதவியாக நகராட்சி சர்வேயரையும் கொண்டு வழக்கு சொத்தை பார்வையிட்டு அளந்து அதன் சர்வே நம்பர், தன்மைகள் குறித்து ஒரு விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல்

செய்தால்தான் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும். இல்லாவிட்டில் பிரதிவாதிகளுக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் உண்டாகும். எனவே வழக்கு சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை ஆணையராகவும் அவருக்கு உதவியாக சீர்காழி நகராட்சி சார் ஆய்வாளர் (நில அளவை) ஆகியோர்களை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை குறிப்பாணையின் சுருக்கம்.</u>

(i) இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. இதில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுக்கப்படுகிறது. இந்த வழக்கானது வாதியால் 2016-ல் தாக்கல் செய்யப்பட்டு பிறகு Special List-ல் போடப்பட்டு வா.சா.1 Proof Affidavit தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட பிறகு இந்த மனு மனுதாரரால் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து ராமலிங்கம் என்பவரின் சொத்தை நடேச படையாட்சிக்கு சொந்தமானது கிடையாது. அசல்வழக்கு எண்.211/1982 என்ற வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு பாகம் பிரிக்க வேண்டி இடைமனு மனு எண்.161/1984-ல் ஆணையர் நியமித்து வழக்கு சொத்து பிரிக்கப்பட்டு 19.02.1993-ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என மனுதாரர்கள் மனுவில் கூறுவது தவறு. அசல் வழக்கு எண்.211/1982 வழக்கின் சர்வே எண்.400/20 ஆகும். சர்வே எண்.400/20-ஐ பொறுத்துதான்அசல் வழக்கு எண்.211/1982 வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சர்வே எண்.400/20-ஐ பொறுத்துதான் இறுதிநிலை தீர்ப்பாணை இடைமனு எண்.161/1984-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) வழக்கு சொத்தின் சர்வே எண்.400/19 பொறுத்து முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இடைமனு எண்.161/1984-ல் இறுதிநிலை தீர்ப்பாணையும்

பிறப்பிக்கப்படவில்லை. தாவா சொத்து வாதியின் கணவர் ராமலிங்கம் என்பவருக்கு உரிமையானதாகும். ராமலிங்கம் இறந்த பிறகு தாவா சொத்தை அவரின் வாரிசுதாரரான வாதி உரிமையுடன் தன் வசத்தில் வைத்து குடும்பத்துடன் அனுபவித்து வருகிறார். இடைமனு எண்.765/2016.ல் இந்நீதிமன்றம் இடைகால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டு முழு விசாரணைக்கு பிறகு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு அதன்படி வாதி இடைமனுவில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு எண். CMA.13/2019 12.02.2021-ல் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கியுள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும், அனுபவமும், வசமும் எந்த காலத்திலும் இல்லை.

(iii) தாவா சொத்தின் சர்வே எண். நான்கெல்லைகள் சரியானவையாகும். தாவா சொத்து ரகமத்துன்னிசா பேகம் என்பவருக்கு விற்பனை செய்யவில்லை. தாவா சொத்தில் 1-ம் பிரதிவாதிக்கே உரிமையில்லாத நிலையில் தாவா சொத்தில் ரகமத்துன்னிசா பேகம் என்பவருக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்துள்ள வரைபடம் உண்மையல்ல தவறானது. பிரதிவாதி எதிர் வழக்குரையுடன்தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள A, B, C, D பகுதியை 1-ம் பிரதிவாதி பாபு என்பவர் ரகமத்துன்னிசா பேகம் என்பவருக்கு விற்ற சொத்திற்கும் , தாவா சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வா.சா.1-ன் முதல் விசாரணை முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆணையர் மற்றும் நில அளவையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கக்கூடியதல்ல.

(iv) அசல் வழக்கு எண்.167/2016-ன் வழக்கு சொத்தும், அசல் வழக்கு எண்.211/1982-ல் கண்டுள்ள சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் ஆகும். தாவா வழக்கில் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மட்டும்தான் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார வழக்கில் அட்வகேட் கமிஷனரும், நில அளவையரும் நியமனம் செய்து சொத்தை அளவீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என சென்னை உயர்நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் பல தீர்ப்புகளில் உத்தரவு வழங்கியுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி மனுதார்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்/வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் கணவர் ராமலிங்கத்திற்கு சீர்காழி நகராட்சியில் வழங்கப்பட்ட பட்டா பதிவேட்டின் படி பாத்தியப்பட்டு அவர் இறப்பிற்கு பிறகு வாரிசு அடிப்படையில் அனுபவத்தில் இருந்து வருவதாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது அசல் வழக்கு எண்.211/1982-ல் காமாட்சியம்மாளுக்கு ஒதுக்கப்பட்டு காமாட்சியம்மாள் கடந்த 26.09.2007-ம் தேதி எழுதிவைத்த உயில் ஆவணம்படி 2-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) இவ்வாறான நிலையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்தும் அசல் வழக்கு

எண்.211/1982-ல் காட்டப்பட்டுள்ள சொத்தும் ஒரே சொத்துதான் என்பதை கோர்ட்டுக்கு எடுத்துக்காட்ட நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் நியமனம்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தொடர்புடைய பிரச்சனையில் உள்ள பொருண்மைகளை தீர்மாணிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் அவசியமற்றதாகும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கூற்றுப்படி அசல் வழக்கு எண்.211/1982.ல் உள்ள சொத்தும் இவ்வழக்கு சொத்தும் ஒரே சொத்து என்பதை தொடர்புடைய ஆவணங்களின் மூலம் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க இயலும். மேலும் வழக்கு சொத்தின் தன்மை குறித்தும், அமைப்பு குறித்தோ, அடையாளம் குறித்தோ எவ்வித சந்தேகமும் இல்லாத நிலையில் நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கதக்கதகல்ல.

(iii) இவ்வாறான நிலையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் என்பது தரப்பினர்களின் வழக்கிற்கு ஆதாரங்களை சேகரிக்கும் முயற்சியாகதான் கருத வேண்டியுள்ளது. மேலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் என்பது ஒரு வழக்கில் பிரச்சனையில் உள்ள பொருண்மைகள் குறித்து நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்துவதற்காகதான் நியமிக்க இயலும். அவ்வாறு இவ்வழக்கில் பிரச்சனையில் உள்ள பொருண்மை குறித்து முடிவு செய்ய நீதிமன்ற ஆணையரின் நியமனம் அவசியமற்றதாக உள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்காக மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நியாயமானதாகவும், சட்டப்படியானதாகவும் இல்லை என்பதால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மனு ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்று முடிவு காணப்பட்டு அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.4/2023–ல்
அசல் வழக்கு எண்.167/2016
நாள்.01.12.2023.